ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தாந்தம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தாந்தம் ॥

## திருக்கூடலூர்

‡தாம் தம் பெருமை அறியார்⋆ தூது
வேந்தர்க்காய⋆ வேந்தர் ஊர் போல்⋆
காந்தள் விரல்⋆ மென் கலை நன் மடவார்⋆
கூந்தல் கமழும்⋆ கூடலூரே (1)

செறுந் திண்⋆ திமில் ஏறுடைய⋆ பின்னை
பெறுந் தண் கோலம்⋆ பெற்றார் ஊர் போல்⋆
நறுந் தண் தீம்⋆ தேன் உண்ட வண்டு⋆
குறிஞ்சி பாடும்⋆ கூடலூரே (2)

பிள்ளை உருவாய்த்⋆ தயிர் உண்டு⋆ அடியேன்
உள்ளம் புகுந்த⋆ ஒருவர் ஊர் போல்⋆
கள்ள நாரை⋆ வயலுள்⋆ கயல்மீன்
கொள்ளை கொள்ளும்⋆ கூடலூரே (3)

கூற்றேர் உருவின்⋆ குறளாய்⋆ நிலம் நீர்
ஏற்றான்⋆ எந்தை பெருமான் ஊர் போல்⋆
சேற்றேர் உழுவர்⋆ கோதைப் போதூண்⋆
கோல் தேன் முரலும்⋆ கூடலூரே (4)

தொண்டர் பரவச்⋆ சுடர் சென்றணவ⋆
அண்டத்தமரும்⋆ அடிகள் ஊர் போல்⋆
வண்டல் அலையுள்⋆ கெண்டை மிளிர⋆
கொண்டல் அதிரும்⋆ கூடலூரே (5)

தக்கன் வேள்வி⋆ தகர்த்த தலைவன்⋆
துக்கம் துடைத்த⋆ துணைவர் ஊர் போல்⋆
எக்கல் இடு⋆ நுண் மணல்மேல்⋆ எங்கும்
கொக்கின் பழம் வீழ்⋆ கூடலூரே (6)

www.prapatti.com

கருந் தண் கடலும்⋆ மலையும் உலகும்⋆
அருந்தும் அடிகள்⋆ அமரும் ஊர் போல்⋆
பெருந் தண் முல்லைப்⋆ பிள்ளை ஓடி⋆
குருந்தம் தழுவும்⋆ கூடலூரே (7)

கலை வாழ்⋆ பிணையோடணையும்⋆ திருநீர்
மலை வாழ் எந்தை⋆ மருவும் ஊர் போல்⋆
இலை தாழ் தெங்கின்⋆ மேல்நின்று⋆ இளநீர்க்
குலை தாழ் கிடங்கின்⋆ கூடலூரே (8)

பெருகு காதல் அடியேன்⋆ உள்ளம்
உருகப் புகுந்த⋆ ஒருவர் ஊர் போல்⋆
அருகு⋆ கைதை மலர⋆ கெண்டை
குருகென்றஞ்சும்⋆ கூடலூரே (9)

‡காவிப் பெருநீர் வண்ணன்⋆ கண்ணன்
மேவித் திகழும்⋆ கூடலூர் மேல்⋆
கோவைத் தமிழால்⋆ கலியன் சொன்ன⋆
பாவைப் பாடப்⋆ பாவம் போமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com